தகவல் தொழில் நுட்பத்துறை, மைய அலுவலகம், எஸ்.பி.எஸ் மார்க், மும்பை 400001
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
போன் Phone: 91 22 2266 0502

*பத்திரிக்கை வெளியீடு*
*Reserve Bank of India*

இந்திய ரிசர்வ் வங்கி
வெப்சைட் Website: www.rbi.org.in
இ மெயில் Email: helpdoc@rbi.org.in

நவம்பர் 05, 2019

**பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கோஆப்ரேட்டிவ் பாங்க் லிமிடெட் வைப்புதாரர்களுக்கான பணம் திரும்பப் பெறும் வரம்பை ரிசர்வ் வங்கி ₹ 50,000/- ஆக உயர்த்துகிறது**

இந்திய ரிசர்வ் வங்கி, அக்டோபர் 14, 2019 ஆம் தேதி முதல் பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கோஆப்ரேட்டிவ் பாங்க் லிமிடெட் வைப்புதாரர்களின் கணக்குகளில் உள்ள மொத்த நிலுவைத் தொகையில் ரூ. 40,000/- (நாற்பதாயிரம் ரூபாய் மட்டும்) திரும்பப் பெற அனுமதி அளித்ததை நினைவு கூரலாம்.

இந்திய ரிசர்வ் வங்கி, மேற்கூறப்பட்ட வங்கியின் பணப்புழக்க நிலை மற்றும் அதன் வைப்புதாரர்களுக்கு பணம் செலுத்துவதற்கான திறன் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்த பின்னர் முன்பு அனுமதிக்கப்பட்ட ரூ. 40,000/- உட்பட, பணம் திரும்பப் பெறுவதற்கான வரம்பை ரூ. 50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஆக உயர்த்துவதற்கு முடிவு செய்துள்ளது. மேற்கண்ட தளர்வு மூலம், வங்கியின் வைப்புதாரர்களில் 78% க்கும் அதிகமானோர் தங்கள் முழு கணக்கு நிலுவையையும் திரும்பப் பெற முடியும்.

வைப்புதாரர்கள் வங்கியின் சொந்த ஏடிஎம்களில் இருந்து நிர்ணயிக்கப்பட்ட ரூ. 50,000/- வரம்பிற்குள் பணம் எடுத்துக்கொள்ள அனுமதியளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது பணம் திரும்பப் பெறுவதற்கான செயல்முறையை எளிதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரிசர்வ் வங்கி இந்த நிலையை உன்னிப்பாக கண்காணித்து வருவதுடன் வங்கியின் வைப்புதாரர்களின் நலனைப் பாதுகாக்கத் தேவையான கூடுதல் நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும்.

**யோகேஷ் தயால்**
தலைமை பொது மேலாளர்

**பத்திரிக்கை வெளியீடு: 2019-2020/1110**